# தேசிய பெறுகை ஆணைக்குழு

# NATIONAL PROCUREMENT COMMISSION

2024 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை அறிக்கை - செலவு விடய இல. 024

தேசிய பெறுகை ஆணைக்குழு, இல.44, ஆர்.ஜீ.சேனாநாயக்க மாவத்தை, கொழும்பு 07.
தொலைபேசி: 011 2665152 - தொலைநகல்: 011 2665162 - மின்னஞ்சல்: sg@nprocom.gov.lk

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | | பக்க இல. |
| **அத்தியாயம் 1** | | 1 |
| 1.1 | தேசிய பெறுகை ஆணைக்குழுவின் தாபிப்பு | 1 |
| 1.2 | நிறுவனத்தின் தொநாக்கும் பணிக்கூற்றும் குறிக்கோள்களும் | 1 |
| 1.3 | முக்கிய பணிகள் | 2 |
| 1.4 | தேசிய பெறுகை ஆணைக்குழுவின் முக்கிய பிரிவுகள் | 4 |
| **அத்தியாயம் 2** | | 6 |
| 2.1 | நிர்வாகப் பிரிவு | 6 |
| 2.2 | நிர்வாகப் பிரிவின் முன்னேற்றம் | 6 |
| 2.2.1 | தேசிய பெறுகை ஆணைக்குழுவின் பணியாட்குழு | 6 |
| 2.2.2 | தேர்தல் ஆணைக்குழுவுக்கு நியமிக்கப்பட்ட/இணைக்கப்பட்ட அலுவலர்கள் | 8 |
| 2.2.3 | மனித வள அபிவிருத்தி | 9 |
| 2.2.4 | ஆணைக்குழுவின் பணியாட்குழு கலந்துகொண்ட செயலமர்வுகளும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் - 2024 | 11 |
| 2.3 | நிதிப் பிரிவு | 12 |
| **அத்தியாயம் 3** | | 15 |
| 3.1 | பெறுகைக் கொள்கைப் பிரிவு | 15 |
| 3.2 | பெறுகைக் கொள்கைப் பிரிவின் முன்னேற்றம் | 15 |
| 3.3 | கொள்திறன் விருத்தி | 18 |
| **அத்தியாயம் 4** | | 32 |
| பெறுகை கண்காணிப்புப் பிரிவின் முன்னேற்றம் | | 32 |
| 4.1 | பெறுகை கண்காணிப்புப் பிரிவு | 32 |
| 4.2 | முக்கிய அடைவுகள் | 32 |
| 4.3 | நடைபெற்றுவரும் பணிகள் | 33 |
| 4.4 | சவால்கள் | 34 |
| 4.5 | இலக்குகள் | 35 |
| 4.6 | முன்னேற்றப் பொழிப்பு | 36 |
| **அத்தியாயம் 5** | | 38 |
| 5.1 | பெறுகை விசாரணைப் பிரிவு | 38 |
| 5.2 | பெறுகை விசாரணைப் பிரிவின் முன்னேற்றம் | 39 |

**விளக்கப்படம் 1** : தே.பெ.ஆணைக்குழுவின் நிறுவன இணைப்பாக்கம் ............................ 4

**அட்டவணை 1** : 2024.12.31 ஆம் திகதி அளவில் தே.பெ.ஆணைக்குழுவின் பதவியினர் பற்றிய விபரம் .................................................................................................. 7

**அட்டவணை 2** : தேசிய பெறுகை ஆணைக்குழு - 2024.12.31 இல் உள்ளவாறான பதவியினர் அறிக்கை ................................................................................................. 7

**அட்டவணை 3** : 2024 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவுக்கு நியமிக்கப்பட்ட/ இடமாற்றப்பட்ட அலுவலர்கள் (நிரந்தர/ ஒப்பந்த/ பதில்) .............................................................. 8

**அட்டவணை 4** : 2024 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவின் பணியாட்குழுவுக்கு வழங்கப்பட்ட பயிற்சிகள் - உள்நாடு ........................................................................... 9

**அட்டவணை 5** : 2024 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவின் பணியாட்குழுவினர் கலந்துகொண்ட செயலமர்வுகள்∴பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் - வெளிநாடு........................................... 11

**அட்டவணை 6** : நிதிநார் முன்னேற்றம் ............................................................ 13

**அட்டவணை 7** : பெறுகை நடவடிக்கைகளுக்கு உரிய பிரச்சினைகள், விசாரணைகளுக்கான விளக்கங்கள், முன்வைக்கப்பட்ட மற்றும் செயலாற்றப்பட்ட கோரிக்கைகள் - 2024.................. 20

**அட்டவணை 8** : 2022, 2023 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட பெறுகைகள் பற்றிய தகவல்கள் 36

**அட்டவணை 9** : 2024 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டங்களும் பெறுகைத் திட்டங்களும் பற்றிய தகவல்கள் ........................................................................... 36

**அட்டவணை 10** : டெயிலி நியூஸ் செய்திப் பத்திரிகையில் பிரசுரமான விலைக்கேள்வி கோரல் அழைப்புக்கள்/ ஆர்வ வெளிப்பாடுகள் பற்றிய தகவல்கள் ................................ 37

**அட்டவணை 11** : பெறுகைகள் ஒப்பந்தமளிப்பை வெளியிடல் பற்றிய தகவல்கள் ................ 37

**அட்டவணை 12** : பெறுகை விசாரணைப் பிரிவின் முன்னேற்றம் .................................... 39

**அட்டவணை 13** : விசாரணைகள் பற்றிய தகவல்கள் 2024 .......................................... 40

# அத்தியாயம் 1

## 1.1 தேசிய பெறுகை ஆணைக்குழுவின் தாபிப்பு

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் XIX ஆ அத்தியாயத்தின் 156 ஆ (1) ஆம் உறுப்புரைக்கு அமைய தாபிக்கப்பட்ட தேசிய பெறுகை ஆணைக்குழு, பின்வரும் உறுப்பினர்களை உள்ளடக்கியுள்ளது:

| | | |
|---|---|---|
| திருமதி டப்ளியூ.சுதர்மா கருணாரத்ன | - | உறுப்பினரும் தவிசாளரும் |
| திரு. டப்ளியூ. ஜவன் திசேரா | - | உறுப்பினர் |
| திரு. டீ.ஏ.பீ.தரணகம | - | உறுப்பினர் |
| திரு. எஸ்.சுமந்திரன் | - | உறுப்பினர் |
| கலாநிதி ஏ.ஜீ.பீ. அசங்க குணவங்ச | - | உறுப்பினர் |

## 1.2 நிறுவனத்தின் தொலைநோக்கும் பணிக்கூற்றும் குறிக்கோள்களும்

### தொலைநோக்கு

தேசிய அபிவிருத்திக்கு வழிவகுக்கும் பெறுகைச் செயன்முறையொன்றை உருவாக்குதல்.

### பணிக்கூற்று

பணத்திற்கேற்ற பெறுமதியை உறுதிப்படுத்துவதற்கு தரப்படுத்தல், கண்காணிப்பு, விசாரணை, அறிக்கையிடல் என்பவற்றின் ஊடாக பெறுகைச் செயன்முறைமையை அமுல்படுத்துவதற்கு அவசியமான வசதியளிப்பதற்கான கொள்கைகளையும் நடபடிமுறைகளையும் உருவாக்குதல்.

### குறிக்கோள்கள்

- தாக்கமுள்ள அரச பெறுகைக் கொள்கைகளையும் நடபடிமுறைகளையும் வகுத்தமைத்தலும் விருத்தி செய்தலும்.
- அரச பெறுகைக் கொள்கைகளையும் வழிகாட்டுநெறிகளையும் நடபடிமுறைகளையும் பின்பற்றுவதை உறுதிசெய்தல்.
- பயனுறுதிமிக்க செயலாற்றுகைக் கண்காணிப்பு முறைமையொன்றை நிறுவுதல்.
- பெறுகைச் செயன்முறையில் ஈடுபட்டுள்ள அலுவலர்களுக்கு ஏற்றுக்கொள்ளபட்ட முறைமையொன்றை நிறுவுதல்.
- சிறப்பான அரச பெறுகை மூலக்கோட்பாடுகளுக்கு அமைவாக சேவைகள் வழங்கப்படுவதை பலப்படுத்தல்.

## 1.3 முக்கிய பணிகள்

(அ) அரச நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் பண்டங்கள், வேலைகள், சேவைகள், மதியுரைச் சேவைகள் மற்றும் தகவல் முறைமைகளின் பெறுகை, முன்னரே அனுமதித்த செயல்திட்டங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்ட பெறுகைத் திட்டங்களின் அடிப்படையில் உள்ளனவா என்பது பற்றி கண்காணித்து உரிய அதிகாரிகளுக்கு அறிக்கையிடுதல்.

(ஆ) அரச நிறுவனங்களினால் பண்டங்கள், வேலைகள், சேவைகள், மதியுரைச் சேவைகள் மற்றும் தகவல் முறைமைகளின் பெறுகைக்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்ற கூறுவிலைதாரர்களுக்கு அத்தகைய பண்டங்கள், வேலைகள், சேவைகள், மதியுரைச் சேரவைகள் மற்றும் தகவல் முறைமைகளின் பெறுகைக்கான விலைக்கேள்விகளைச் சமர்ப்பிக்கும் செயன்முறையில் கலந்துகொள்ளும் பொருட்டு சமமான வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளதா என்பது குறித்து கண்காணித்து தகுந்த அதிகாரிகளுக்கு அறிக்கையிடுதல்.

(இ) அரச நிறுவனங்களின் பண்டங்கள், வேலைகள், சேவைகள், மதியுரைச் சேவைகள் மற்றும் தகவல் முறைமைகளின் வழங்கலுக்கு ஒப்பந்தக்காரர்களைத் தெரிவுசெய்யும் அதேபோல் ஒப்பந்தங்களை அளிப்பதற்கு ஒப்பந்தக்காரர்களைத் தெரிவுசெய்யும்போதும் ஒப்பந்தங்களை அளிக்கும் நடபடிமுறை நியாயமானதாக, வெளிப்படைத்தன்மையானதாக உள்ளதா என்பது குறித்து கண்காணித்து தகுந்த அதிகாரிகளுக்கு அறிக்கையிடுதல்.

(ஈ) அரச நிறுவனங்களினால் பெறுகைக் குழுக்களுக்கும் பெறுகைகளுக்கும் தொடர்புடைய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களுக்கு நியமிக்கப்படும் உறுப்பினர்கள் ஏற்றவாறு தகுதிகளைப் பெற்றுள்ளனரா என்பது குறித்து அறிக்கையிடுதல்.

(உ) அரச நிறுவனங்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளுக்கும் வழிகாட்டு நெறிகளுக்கும் அப்பால் செய்யப்பட்ட பெறுகை அறிக்கைகள் குறித்து விசாரணை செய்தலும், குறித்த பெறுகைகள் சம்பந்தமாக பொறுப்பு வகிக்கும் அலுவலர்களை அவசிய நடவடிக்கைகளுக்காக உரிய அதிகாரிகளுக்கு அறிக்கையிடுதலும், அத்துடன்,

(ஊ) அரச பெறுகை பற்றிய கொள்கைகள், வழிகாட்டுநெறிகள், நடபடிமுறைகள் பற்றிய விழிப்பூட்டலை ஊக்குவித்தல்.

குறித்த அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய ஆணைக்குழுவினால் 2023-2025 ஆம் ஆண்டுக்கான செயல்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன், ஒவ்வோர் ஆண்டிலும் பின்பற்றப்பட வேண்டிய குறிப்பான செயற்பாடுகள் விரிவாக பட்டியலிடப்பட்டுள்ளன. 2024 ஆம் ஆண்டுக்காக அனுமதிக்கப்பட்ட செயல் திட்டத்தின்படி 2024.01.01 ஆம் திகதியிலிருந்து 2024.12.31 ஆம் திகதி வரையான காலத்துள் தேசிய பெறுகை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் குறித்து இவ்வறிக்கையில் விரிவாக விபரிக்கப்படுகிறது.

செயல்திட்டத்தின்படி அரச பெறுகைக்காக பின்வரும் புதிய வழிகாட்டிநெறிகளையும் கைந்நூல்களையும் தயாரிப்பதற்கு தேசிய பெறுகை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

- பண்டங்கள், வேலைகள், மதியுரை அல்லாத சேவைகளுக்கான, வழிகாட்டல்கள் மற்றும் கைந்நூல்கள்.
- மதியுரைச் சேவைகளுக்கான வழிகாட்டல்கள் மற்றும் கைந்நூல்கள்.
- ஒப்பந்த முகாமைத்துவம் பற்றிய வழிகாட்டல்கள்.
- மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களுக்கான பெறுகை வழிகாட்டல்கள்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 156இ.(1) உறுப்புரைக்கு அமைய செயலாற்றி, தேசிய பெறுகை ஆணைக்குழு 2024 ஆம் ஆண்டில் நடத்திய ஆணைக்குழுக் கூட்டங்கள், ஏனைய அரச நிறுவனங்களுடன் நடத்திய கூட்டங்கள் மற்றும் செயலமர்வுகள் பற்றிய பொழிப்பான தகவல்கள் வருமாறு:

| மாதம் | ஆணைககுழுக் கூட்டங்களின் எ்ணணிக்கை | அரச நிறுவனங்களுடன் நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை | செயலமர்வுகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சனவரி | 04 | 06 | - | 10 |
| பெப்ரவரி | 04 | 07 | - | 11 |
| மார்ச் | 03 | 08 | 01 | 12 |
| ஏப்ரல் | 01 | 02 | 01 | 04 |
| மே | 04 | 10 | - | 14 |
| ஜூன் | 04 | 02 | - | 06 |
| ஜூலை | 04 | 04 | - | 08 |
| ஆகஸ்ட் | 05 | 03 | 01 | 09 |
| செப்டம்பர் | 02 | 03 | 02 | 07 |
| அக்டோபர் | 05 | 08 | - | 13 |
| நவம்பர் | 03 | 04 | 07 | 14 |
| டிசம்பர் | 03 | 03 | 02 | 08 |
| **முழு மொத்தம்** | **42** | **60** | **14** | **116** |

நிறுவன இணைப்பாக்கம் - தேசிய பெறுகை ஆணைக்குழு




*விளக்கப்படம் 1 : தேசிய பெறுகை ஆணைக்குழுவின் நிறுவன இணைப்பாக்கம்*

## 1.4 தேசிய பெறுகை ஆணைக்குழுவின் முக்கிய பிரிவுகள்

<u>நிர்வாக மற்றும் நிதிப் பிரிவு</u>

நிறுவனத்தின் பொதுவான நிர்வாகம், தாபன நடவடிக்கைகள் சம்பந்தமாக செயலாற்றுதல், தேசிய பெறுகை ஆணைக்குழுவின் பணிகள் மற்றும் கடமைகளை சிறப்பாக அமுல்படுத்துவதற்கு தேவையான முக்கிய பணியை அமுல்படுத்தும் பொறுப்பை வகிக்கிறது. தே.பெ.ஆணைக்குழு அலுவலகத்தின் அனைத்து நிதி, கணக்கீட்டு மற்றும் பெறுகை நடவடிக்கைகளுக்கும் இப்பிரிவு பொறுப்பு வகிக்கிறது. இது தவிர பாராளுமன்றம், அமைச்சரவை அலுவலகம், சனாதிபதி செயலகம், நிதி அமைச்சு உள்ளிட்ட அரச நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை அது மேற்பார்வை செய்கிறது. அது பெறுகை சார்ந்த விடயங்கள் சம்பந்தமாக தே.பெ. ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்பு மற்றும் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுவதுடன், தேசிய பெறுகை ஆணைக்குழுவுக்கு அதன் பணிகளுக்கு வசதியளிக்கிறது.

பணிப்பாளர் (நிர்வாகம்) இப்பிரிவுக்கு தலைமை தாங்குகிறார்.

**பெறுகை கொள்கைப் பிரிவு**

பெறுகைக் கொள்கைப் பிரிவு அரச பெறுகைக்கான கொள்கை வகுப்பு, தரப்படுத்தல் மற்றும் கொள்கை மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. இச்சூழமைவில் பிரிவினால் அரச பெறுகையோடு சம்பந்தப்பட்ட கொள்கைசார் விடயங்கள் சம்பந்தமாக ஆணைக்குழுவுக்கு அவதானிப்புகளையும் சிபார்சுகளையும் வழங்குகிறது. அதேபோல், அரச நிறுவனங்களின் கொள்திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள், பயிற்சிகள், விழிப்பூட்டல்களும் இப்பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், பெறுகை நிறுவனங்களின் சாத்தியவள விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களும் பயிற்றுவிப்புகளும் விழிப்பூட்டல்களும் இப்பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. தேசிய பெறுகை ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைக்கப்படும் அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்குரிய அவதானிப்புகளும் சிபார்சுகளும் அடங்கிய அறிக்கைகளைச் சமர்ப்பிக்கிறது.

பணிப்பாளர் (கொள்கைகள்) இப்பிரிவுக்கு தலைமை தாங்குகிறார்.

**பெறுகை கண்காணிப்புப் பிரிவு**

அரச நிறுவனங்களினால் பண்டங்கள், வேலைகள், சேவைகள், தகவல் முறைமைகளின் பெறுகை, முன்னரே அனுமதித்த செயல்திட்டங்களின்படி தயாரிக்கப்பட்ட பெறுகைத் திட்டங்களின் மீதே பெறுகை செய்யப்படுகிறதா என்பதை கண்காணித்தலும், உரிய அதிகாரிக்கு அறிக்கையிடுவதும் இப்பிரிவின் பொறுப்பாகும்.

மேலும் பெறுகை நிறுவனங்கள், எந்தளவுக்கு பெறுகைக் கொள்கைகளை கடைப்பிடிக்கின்றன என்பதை இப்பிரிவு கண்காணிக்கிறது. அது பெறுகை தொடர்பான விடயங்களில் தேசிய பெறுகை ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைக்கப்படும் அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்குரிய அவதானிப்புகளும் சிபார்சுகளும் அடங்கிய அறிக்கைகளைச் சமர்ப்பிக்கிறது.

பணிப்பாளர் (கண்காணிப்பு) இப்பிரிவுக்கு தலைமை தாங்குகிறார்.

**பெறுகை விசாரணைப் பிரிவு**

இப்பிரிவு, உரிய பெறுகை வழிகாட்டிநெறிகளுக்கும் நடபடிமுறைகளுக்கும் புறம்பாக அரச நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட பெறுகைகள் தொடர்பான முறையீடுகள்/ அறிக்கைகள் குறித்து விசாரணை செய்து, அத்தகைய பெறுகைகளுக்குப் பொறுப்பான அதிகாரிகளை தேவைப்படும் நடவடிக்கைகளுக்காக உரிய அதிகாரிகளுக்கு அறிக்கையிட்டு, எதிர்கால பெறுகைகளில் அவ்வாறான குறைபாடுகள் மீண்டும் ஏற்படாதவாறு அறிவுறுத்தல்களை வழங்குகிறது. அதேபோல், அரச பெறுகைக்கு உரிய விடயங்கள் தொடர்பில் தேசிய பெறுகை ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைக்கப்படும் அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்குரிய அவதானிப்புகளும் சிபார்சுகளும் அடங்கிய அறிக்கைகளைச் சமர்ப்பிக்கிறது.

இப்பிரிவுக்கு பணிப்பாளர் (விசாரணை) தலைமை தாங்குகிறார்.

# அத்தியாயம் 2

## 2.1 நிர்வாகப் பிரிவு

தேசிய பெறுகை ஆணைக்குழு அலுவலகத்தின் தாபன அலுவல்களையும் தேசிய பெறுகை ஆணைக்குழுவின் சேவை வழங்கல் கொள்திறனைப் பலப்படுத்தும் முக்கிய பொறுப்பு, நிர்வாகப் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இப்பிரிவுக்கு பணிப்பாளர் (நிர்வாகம்) தலைமை தாங்குகின்றார்.

## 2.2. நிர்வாகப் பிரிவின் முன்னேற்றம்

### 2.2.1 தேசிய பெறுகை ஆணைக்குழுவின் பணியாட்குழு

பதவியினர் எண்ணிக்கை

முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் ஒப்புதலின்படி தேசிய பெறுகை ஆணைக்குழுவின் மொத்த பதவியினர் எண்ணிக்கை 50 ஆகும்.

2024 திசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு அனுமதித்த பதவியினர் மற்றும் தற்போதுள்ள பதவியினர் விபரம் வருமாறு:

*அட்டவணை 1 : 2024.12.31 இல் உள்ளவாறான தேசிய பெறுகை ஆணைக்குழுவின் பதவியினர் பற்றிய விபரம்*

| அனுமதித்த பதவியினர் எண்ணிக்கை | தற்போதுள்ள பதவியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 50 | 23 | 27 |

அட்டவணை 2 : தேசிய பெறுகை ஆணைக்குழு –
2024.12.31 இல் உள்ளவாறான பணியாட்குழு அறிக்கை

| தொ. இல. | பதவி | சேவை | தரம் | அ.நி.க. இல. 03/2016 இன்படி சம்பளக் குறியீடு | அனுமதித்த பதவிகளின் எண்ணிக்கை | தற்போது பணியில் ஈடுபட்டுள்ள | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | செயலாளர் நாயகம் | இ.நி.சே. | விசேட | SL-3 | 1 | 1 | 0 |
| 2 | மேலதிக செயலாளர் | இ.நி.சே. | விசேட | SL-3 | 1 | 0 | 1 |
| 3 | பெறுகை நிபுணர் | ஒப்பந்த அடிப்படையில் | | ரூ.88000+ ரூ.7800 | 3 | 0 | 3 |
| 4 | பணிப்பாளர் | இ.நி.சே. | 1 | SL-1 | 2 | 2 | 0 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 5 | உதவிப் பணிப்பாளர் | இ.நி.சே. | III/II | SL-1 | 2 | 0 | 2 |
| 6 | பணிப்பாளர் | இ.பொ.சே. | 1 | SL-1 | 1 | 1 | 0 |
| 7 | உதவிப் பணிப்பாளர் | இ.பொ.சே. | 111/11 | SL-1 | 1 | 0 | 1 |
| 8 | கணக்காளர் | இ.க.சே. | 1 | SL-1 | 1 | 1 | 0 |
| 9 | கணக்காளர் | இ.க.சே. | 111/11 | SL-1 | 2 | 1 (பதில்) | 2 |
| 10 | சட்ட அலுவலர் | திணைக்கள | 111/11 | SL-1 | 1 | 0 | 1 |
| 11 | நிர்வாக அலுவலர் | முகாமைத்துவ சேவை அலுவலர் சேவை | அதியுயர் வகுப்பு | MN-7 | 1 | 1 | 0 |
| 12 | மொழிபெயர்ப்பாளர் | மொழிபெயர்ப்பாளர் சேவை | 1 | MN-6 | 2 | 1 | 1 |
| 13 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப அலுவலர் | இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை | வகுப்பு 2 11/1 | MN-6 | 1 | 0 | 1 |
| 14 | தவிசாளரின் இணைப்புச் செயலாளர் | தற்காலிக | – | அ.நி.சு. இல. 03/2016 இன்படி | 1 | 1 | 0 |
| 15 | செயலாளர் நாயகத்தின் இணைப்புச் செயலாளர் | தற்காலிக | – | அ.நி.சு. இல. 03/2016 இன்படி | 1 | 1 | 0 |
| 16 | அபிவிருத்தி அலுவலர் | அபிவிருத்தி அலுவலர் சேவை | 111/11/1 | MN-4 | 10 | 6 | 4 |
| 17 | முகாமைத்துவ சேவை அலுவலர் | முகாமைத்துவ சேவை அலுவலர் சேவை | 111/11/1 | MN-2 | 8 | 02 (முனைப்பான) 01- (ஒப்பந்த) | 5 |
| 18 | சாரதி | இணைந்த சாரதி சேவை | 111/11/I விசேட | PL -3 | 6 | 02 - (முனைப்பான) 01 (ஒப்பந்த) | 3 |
| 19 | அலுவலகப் பணி உதவியாளர் | அலுவலகப் பணியாளர் சேவை | 111/11/I விசேட | PL -1 | 5 | 2 | 3 |
| | | | | | 50 | 23 | 27 |

**2.2.2** ஆணைக்குழுவுக்கு நியமிக்கப்பட்ட/ இணைக்கப்பட்ட அலுவலர்கள் (நிரந்தர, ஒப்பந்த, பதில்) – 2024

அட்டவணை 3 : 2024 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவுக்கு நியமிக்கப்பட்ட / இணைக்கப்பட்ட அலுவலர்கள் விபரம் (நிரந்தர, தற்காலிக, ஒப்பந்த, பதில்)

| | பெயர் | பதவி | அமுலுக்குவரும் திகதி |
|---|---|---|---|
| 01 | திரு. எல்.எச்.ஏ.தர்மசேன | மு.சே.அ. (ஒப்பந்த) | 2024.03.01 |
| 02 | செல்வி பி.என்.பீ.சி.பெரேரா | நிர்வாக அலுவலர் | 2024.03.06 |
| 03 | செல்வி பி.ஏ.டீ.பிரமோதிகா | கணக்காளர் (பதில்) | 2024.03.13 இலிருந்து ஒரு வருடம் |
| 04 | திருமதி ஏ.எம்.வி.மீப்பேகம | மு.சே.அ. 1 | 2024.04.16 |
| 05 | திரு. ஜே.வி.சுமித் திலக்லால் | சாரதி (ஒப்பந்த) | 2024.07.01 |
| 06 | திருமதி ஏ.ஆர்.மானெல் | அபி.உ. 1 | 2024.07.22 |
| 07 | திருமதி வை.எச்.குணவர்தன | செயலாளர் நாயகத்தின் இணைப்புச் செயலாளர் (தற்காலிக) | 2024.10.01 |
| 08 | திரு. எம்.ஏ.காமினீ | மொழிபெயர்ப்பாளர் | 2024.10.21 |
| 09 | திரு. ஏ.பீ.எஸ்.பீ.வாஸ் குணவர்தன | சாரதி (ஒப்பந்த) | 2024.11.01 |

2.2.3 மனித வள அபிவிருத்தி

அட்டவணை 4 : 2024 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவின் பணியாட்குழு கலந்துகொண்ட செயலமர்வுகள்/ பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் - உள்நாடு

| தொ. இல. | அலுவலரின் பெயர் | பதவிப் பெயர் | பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | பயிற்சிக் காலம் | பயிற்சிக் காலம் (மணித்தியாலங்கள்) | பயிற்சி நிறுவகம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | திருமதி ஜீ.என்.கே. விஜேதுங்க | பணிப்பாளர் (நிர்வாகம்) | Speechcraft Training Programme | 2024.10.23 முதல் பி.ப. 4.30 – பி.ப. 5.15 (2 மணித்தியாலங்கள் வீதம்) செவ்வாய் 10 நாட்கள் | 20 மணித்தியாலங்கள் | இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் |
| | | | Capacity Building Programme – ADB | 2024.06.03-2024.06.05 | 03 நாட்கள் | ஆசிய அபிவிருத்தி வங்கி |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | Capacity Building Programme – on tax Crimes Investigation | 2024.12.02-2024.12.05 | 04 நாட்கள் | ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் |
| 02. | திரு. ஏ.பீ.டி.ஐ. பிரசன்ன | பணிப்பாளர் (கொள்கைகள்) | பேண்தகு பெறுகை | 2024.06.26 - 2024.06.27 | 02 நாட்கள் | சுற்றாடல் அமைச்சு |
| 03. | திரு. எஸ்.மஹீந்தன் | பணிப்பாளர் (விசாரணை) | Capacity Building Programme – on tax Crimes Investigation | 2024.12.02-2024.12.05 | 04 நாட்கள் | ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் |
| 04. | பீ.ஏ.டி.எம்.டி. பொன்வீர | பணிப்பாளர் (கண்காணிப்பு) | பேண்தகு பெறுகை | 2024.12.26 – 2024.06.27 | 02 நாட்கள் | சுற்றாடல் அமைச்சு |
| 05. | செல்வி பி.என்.பீ.சி. பெரேரா | நிர்வாக அலுவலர் | ITMIS | 2024.04.22 - 2024.04.26 | 04 நாட்கள் | நிதி அமைச்சு |
| | | | Capacity Building Programme – ADB | 2024.06.03-2024.06.05 | 04 நாட்கள் | ஆசிய அபிவிருத்தி வங்கி |
| 06. | திருமதி யஷிகா ஸ்ரீமாலி | அபிவிருத்தி அலுவலர் | Training Program on The World Bank Procurement Framework | 2024.03.19 - 2024.03.22 | 04 நாட்கள் | உலக வங்கி |
| | | | Diploma in Procurement & Contract Administration -2025 | 2024.12.19 முதல் | ஓர் ஆண்டு | தேசிய வேலையாளர் பயிற்சி நிறுவகம் |
| | | | Asia, the Next Five Project Exit Strategy Workshop | 2024.11.07 – 2024.11.08 | 02 நாட்கள் | சுற்றாடல் அமைச்சு |
| 07. | திரு. டீ.எஸ்.சி. எதிரிசூரிய | அபிவிருத்தி அலுவலர் | Capacity Building Programme – ADB | 2024.06.03-2024.06.05 | 04 நாட்கள் | ஆசிய அபிவிருத்தி வங்கி |
| | | | ITMIS | 2024.04.22 - 2024.04.26 | 04 நாட்கள் | நிதி அமைச்சு |
| | | | அரச பெறுகைச் செயன்முறை பற்றிய | 2024.09.27 முதல் 10 வெள்ளிக்கிழமை | 70 மணித்தியாலங்கள் | திறன் அபிவிருத்தி நிதியம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | சான்றிதழ் பாடநெறி | நாட்கள். | | |
| 08. | திருமதி என்.ஜீ. அபேசூரிய | அபிவிருத்தி அலுவலர் | ITMIS | 2024.04.22 - 2024.04.26 | 04 நாட்கள் | நிதி அமைச்சு |
| | | | Diploma in Procurement & Contract Administration -2025 | 2024.12.19 முதல் | ஓராண்டு | தேசிய வேலையாளர் பயிற்சி நிறுவகம் |
| 09. | திருமதி பீ.யூ.வெதகே | அபிவிருத்தி அலுவலர் | Diploma in Procurement & Contract Administration -2025 | 2024.12.19 முதல் | ஓராண்டு | தேசிய வேலையாளர் பயிற்சி நிறுவகம் |
| | | | Capacity Building Programme – ADB | 2024.06.03-2024.06.05 | 04 நாட்கள் | ஆசிய அபிவிருத்தி வங்கி |
| 10. | திருமதி ஓஷதீ அபேரத்ன | அபிவிருத்தி அலுவலர் | Training Program on The World Bank Precurement Framework | 2024.03.19-2024.03.22 | 04 நாட்கள் | உலக வங்கி |
| | | | Diploma in Procurement & Contract Administration -2025 | 2024.12.19 முதல் | ஓராண்டு | தேசிய வேலையாளர் பயிற்சி நிறுவகம் |
| 10. | திருமதி அருணி மீப்பேகம | முகாமைத்துவ சேவை அலுவலர் | ITMIS | 2024.04.22 - 2024.04.26 | 04 நாட்கள் | நிதி அமைச்சு |
| | | | Capacity Building Programme – ADB | 2024.06.03-2024.06.05 | 04 நாட்கள் | ஆசிய அபிவிருத்தி வங்கி |
| | | | Asia, the Next Five Project Exit Strategy Workshop | 2024.11.07 – 2024.11.08 | 02 நாட்கள் | சுற்றாடல் அமைச்சு |

**2.1.4.** ஆணைக்குழுவின் பணியாட்குழு கலந்துகொண்ட செயலமர்வுகளும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களும் 2024

அட்டவணை 5 : 2024 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவின் பணியாட்குழு கலந்துகொண்ட செயலமவுகள்/ பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் - வெளிநாடு

| தொ. இல. | அலுவலரின் பெயர் | பதவிப் பெயர் | பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | அதனை நடத்திய நாடு | பயிற்சிக் காலம் |
|---|---|---|---|---|---|
| 01 | திருமதி சுதர்மா கருணாரத்ன | தவிசாளர் | Global Precurement Summit – 2024 | இந்தியா | 2024.02.08 – 2024.02.09 |
| | | | International Procurement Workshop | தென் கொரியா | 2024.09.25 – 2024.09.27 |
| 02 | திரு. ஐவன் திசேரா | உறுப்பினர் | Green Public Procument and Eco labeling study visit | ஜேர்மன் | 2024.12.15 – 2024.12.21 |
| 03 | திரு. டி.சி. சிறிபத்தன | செயலாளர் நாயகம் | International Public Procurement Workshop | தென் கொரியா | 2024.04.17-2024.04.19 |
| | | | e- GP System Development Implementation and Rollout in Sri Lanka – Exposure Visit | பங்களாதேஷ் | 2024.06.01-2024.06.05 |
| | | | e- GP System Development Implementation and Rollout in Sri Lanka – Exposure Visit | இந்தியா | 2024.09.02-2024.09.03 |
| | | | 10th conference of the Asia Pacific Public Electronic Procurement Network | பிலிப்பைன்ஸ் | 2024.12.11-2024.12.13 |
| 04 | திரு. ஏ.பீ.டி.ஐ. பிரசன்ன | பணிப்பாளர் (கொள்கை) | Sustainable / Green Public Procurement Expert Meeting | தாய்லாந்து | 2024.03.27 - 2024.03.30 |
| | | | Training On Life Cycle costing within Sustainable Public Procurement | தாய்லாந்து | 2024.09.24 - 2024.09.26 |
| | | | Green Public Procurement and Ecolabelling study visit | ஜேர்மன் | 2024.12.15-2024.12.21 |
| 05 | திரு. பீ.ஏ.டீ.எம். பொன்வீர | பணிப்பாளர் (கண்காணிப்பு) | International Public Procurement Workshop | தென் கொரியா | 2024.04.17-2024.04.19 |
| | | | ADB South Asia Portfolio Forum – 2024 | இந்தோனேசியா | 2024.11.11 - 2024.11.13 |
| 06 | திருமதி ஜீ.என்.கே. விஜேதுங்க | பணிப்பாளர் (நிர்வாகம்) | Seminar on Application and management of PPT mode of Sri Lanka | சீனா | 2024.10.11 - 2024.10.24 |

## 2.3 நிதிப் பிரிவு

நிதிப் பிரிவு, தேசிய பெறுகை ஆணைக்குழுவின் நிதிசார் நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் முறைசார் தகவல் மற்றும் முகாமைத்துவ முறைமையொன்றை வழங்குகிறது. 2024 ஆம் ஆண்டுக்கு தேசிய பெறுகை ஆணைக்குழுவுக்கு வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகளாக 129 மில்லியன் ரூபா தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. அந்நிதி ஒதுக்கீட்டில் 69.8% (90.04 மில்லியன் ரூபா) செலவிடப்பட்டது. அது பற்றிய விபரங்கள் கீழ்வருமாறு:-

## அட்டவணை 6 : நிதிசார் முன்னேற்றம்

| செலவு விடய இல. | விபரம் | நிதி ஒதுக்கீடு | நிதி ஒதுக்கீட்டில் பயன்படுத்திய அளவு | நிதி ஒதுக்கீட்டில் பயன்படுத்திய அளவு (%) | நிதி ஒதுக்கீட்டு அளவு | சேமிப்பின் சத வீதம் |
|---|---|---|---|---|---|---|

**மீண்டெழும் செலவினம்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1001 | சம்பளங்களும் வேதனங்களும் | 14,150,000.00 | 12,442,488.53 | 87.93% | 1,707,511.47 | 12.07% |
| 1002 | மேலதிக நேரமும் லீவு நாட் சம்பளமும் | 1,600,000.00 | 303,304.62 | 18.96% | 1,296,695.38 | 81.04% |
| 1003 | வேறு கொடுப்பனவுகள் | 15,650,000.00 | 15,609,106.88 | 99.74% | 40,893.12 | 0.26% |
| 1101 | உள்நாட்டு | 37,500.00 | 3,150.00 | 8.40% | 34,350.00 | 91.60% |
| 1102 | வெளிநாட்டு | 1,207,500.00 | 1,207,331.50 | 99.99% | 168.50 | 0.01% |
| 1201 | எழுதுகருவிகளும் அலுவலக தேவைகளும் | 1,500,000.00 | 923,329.29 | 61.56% | 576,670.71 | 38.44% |
| 1202 | எரிபொருள் | | | | | |
| 2 | எரிபொருள் கொடுப்பனவு | 5,600.00.00 | 5,540,605.00 | 98.94% | 59,395.00 | 1.06% |
| 9 | குழாம் வாகனங்களுக்கான எரிபொருள் | 2,100,000.00 | 173,290.56 | 8.25% | 1,926,709.44 | 91.75% |
| 10 | எரிபொருள்கள் - வேறு | 1,200,000.00 | 42,740.76 | 3.56% | 1,157,259.24 | 96.44% |
| 1203 | உணவு பானங்களும் சீருடைகளும் | | | | | |
| 2 | சீருடைகள் | 100,000.00 | 4,000.00 | 4.00% | 96,000.00 | 96.00% |
| 1205 | வழங்கல்கள் - வேறு | 2,000,000.00 | 815,469.24 | 40.77% | 1,184,530.76 | 59.23% |
| 1301 | வாகனங்கள் பராமரிப்புச் செலவினம் | 1,600,000.00 | 1,574,527.17 | 98.41% | 25,472.83 | 1.59% |
| 1302 | இயந்திரங்களும் பொறிகளும் | 300,000.00 | 70,320.00 | 23.44% | 229,680.00 | 76.56% |
| 1401 | போக்குவரத்து | 2,500,000.00 | 2,442,235.78 | 97.69% | 57,764.22 | 2.31% |
| 1402 | அஞ்சல் மற்றும் தொடர்பாடல் | 1,175,000.00 | 1,162,949.31 | 98.97% | 12,050.69 | 1.03% |
| 1403 | மின்சாரமும் நீரும் | 1,650,000.00 | 1,649,499.43 | 99.97% | 500.57 | 0.03% |
| 1404 | குத்தகையும் உள்ளூராட்சி மன்ற வரிகளும் | 150,000.00 | 40,000.00 | 26.67% | 110,000.00 | 73.33% |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1405 | துப்புரவாக்கல் சேவைகள் | 1,000,00.00 | 896,316.00 | 89.63% | 103,684.00 | 10.37% |
| 1407 | பாதுகாப்புச் சேவைகள் | 1,500,00.00 | 1,392,202.51 | 92.81% | 107,797.49 | 7.19% |
| 1408 | செயற்பாட்டுக் குத்தகையின் கீழ் கொள்வனவு செய்த வாகனங்களுக்கான குத்தகைத் தொகை | 3,000,000.00 | - | 0.00% | 3,000,000.00 | 1.00% |
| 1409 | வேறு | - | - | - | - | - |
| 138 | இயந்திர உபகரணங்களும் அலுவலக உபகரணங்களும் சேவை ஒப்பந்தங்களும் | 200,000.00 | - | 0.00% | 200,000.00 | 100.00% |
| 139 | வாகனக் காப்புறுதி | 500,000.00 | 226,641.42 | 45.33% | 273,358.58 | 54.67% |
| 140 | நானாவித சேவைச் செலவுகள் | 2,000,000.00 | 1,903,135.40 | 95.16% | 96,864.60 | 4.84% |
| 1506 | அரசாங்க அலுவலர்களின் ஆதனக் கடன் வட்டி | 100,000.00 | 80,371.39 | 80.37% | 19,628.61 | 19.63% |
| 1703 | அரசகரும மொழிக் கொள்கையை அமுல்படுத்தல் | 180,000.00 | 176,224.16 | 97.90% | 3,775.84 | 2.10% |

மூலதனச் செலவினம்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2001 | சொத்துக்கள் புனரமைப்பும் முன்னேற்றலும் – கட்டிடங்களும் கட்டுமானங்களும் | 50,000,000.00 | 38,783,453.92 | 74.57% | 11,216,548.08 | 22.43% |
| 2002 | சொத்துக்கள் புனரமைப்பும் முன்னேற்றலும் – இயந்திரங்களும் பொறிகளும் | 100,000.00 | - | 0.00% | 100,000.00 | 100.00% |
| 2003 | சொத்துக்கள் புனரமைப்பும் முன்னேற்றலும் – வாகனங்கள் | 1,000,000.00 | 553,250.00 | 55.33% | 446,750.00 | 44.68% |
| 2102 | சொத்துக்கள் புனரமைப்பும் முன்னேற்றலும் – தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | 1,000,000.00 | - | 0.00% | 1,000,000.00 | 100.00% |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2103 | சொத்துக்கள் புனரமைப்பும் முன்னேற்றலும் – இயந்திரங்களும் உபகரணங்களும் | 2,900,000.00 | 358,211.20 | 12.35% | 2,541,788.80 | 87.65% |
| 2401 | பணியாட்குழு பயிற்சிகள் | 1,000,000.00 | 375,000.00 | 37.50% | 625,000.00 | 62.50% |
| | பெறுகை அறிக்கைகளும் தழுவல்களும் | - | - | - | - | - |
| 2509 | வேறு | 12,000,000.00 | 1,286,896.37 | 10.72% | 10,713,103.63 | 89.28% |
| | | 129,000,000.00 | 90,036,048.44 | 69.80% | 38,963,951.56 | 30.20% |

# அத்தியாயம் 3

## 3.1 பெறுகைக் கொள்கைப் பிரிவு

அரச பெறுகை தொடர்பான வழிகாட்டல்கள், நடபடிமுறைகள், வழிகாட்டிநெறிகள் அடங்கிய கொள்கைகளைத் தயாரிப்பது இப்பிரிவின் முக்கிய செயற்பொறுப்பாகும். அதேபோல், அரச நிறுவனங்களினால் தேசிய பெறுகை ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைக்கப்படும்ட பெறுகை நடவடிக்கைகளுக்குரிய பிரச்சினைகள், விசாரணைகள், விளக்கங்கள், அறிவுறுத்தல்களுக்கான கோரிக்கைகள் குறித்து ஆராய்ந்து கண்காணிப்புகளையும் சிபார்சுகளையும் ஆணைக்குழுவுக்கு வழங்குதல், அரச பெறுகை நடவடிக்கைகளில் ஈடுபடும் அலுவலர்களின் கொள்திறன் விருத்திக்கு உரிய நிகழ்ச்சித்திட்டங்களைத் திட்டமிடுதலும் அமுல்படுத்தலும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது.

## 3.2 பெறுகைக் கொள்கைப் பிரிவின் முன்னேற்றம்

2024 ஆம் ஆண்டில் பின்வரும் நிறுவனங்களினால்/தரப்புகளினால் சமர்ப்பிக்கப்பட்ட, பெறுகை நடவடிக்கைகளுக்குரிய விசாரணைகள், விளக்கங்கள். அறிவுறுத்தல்களுக்கான கோரிக்கைகள் தொடர்பில் அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

1. இலங்கை வங்கி
2. இலங்கை மின்சார சபை
3. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
4. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வுசெய்வதற்கான ஆணைக்குழு
5. அரச கணக்குகள் குழு
6. நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை – CIDA
7. வரை. கிரியேட்டிவ் ரெக்ஸ்ரைல்ஸ் மில்ஸ் (தனியார்) கம்பனி
8. இலங்கை கடன் தகவல் பணியகம்
9. குடிசன மதிப்பு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களம்
10. கல்வித் திணைக்களம் (வடமேல்)
11. பரீட்சைத் திணைக்களம்
12. அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களம்
13. நீர்ப்பாசனத் திணைக்களம், கிழக்கு மாகாணம்
14. தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்
15. பொது நிதித் திணைக்களம்
16. சமூர்த்தி அபிவிருத்தித் திணைக்களம்
17. கம்பனிப் பதிவாளர் திணைக்களம்
18. கட்டிடத் திணைக்களம்
19. DIMO தனியார் கம்பனி
20. மாவட்ட செயலகம் - மொணராகலை
21. மாவட்ட செயலகம் - கண்டி
22. மாவட்ட செயலகம் - கிளிநொச்சி
23. கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
24. தேர்தல் ஆணைக்குழு

25. அதிவேகப் பாதைகள் நடவடிக்கைகள், பராமரிப்பு மற்றும் முகாமைப் பிரிவு, தலைமை அலுவலகம், பண்டாரகம
26. இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
27. கும்பலாதர கன்ஸ்ரக்சன்ஸ்
28. லலித் அத்துலத்முதலி மகாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்
29. வரை. லங்கா நிலக்கரி (தனியார்) கம்பனி
30. மால்போ வர்த்தகக் கம்பனி
31. மெட்ரோபொலிட்டன்
32. விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு
33. புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு
34. பாதுகாப்பு அமைச்சு
35. கல்வி, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சு
36. சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு
37. நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு
38. பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு
39. மின்சக்தி, எரிசக்தி அமைச்சு
40. அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
41. பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு
42. கிராமிய, நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு
43. விளையாட்டு மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சு
44. தொழில்நுட்ப அமைச்சு
45. சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு
46. வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு
47. போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகம் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு
48. நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
49. மகளிர், சிறுவர், இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு.
50. மின்சக்தி எரிசக்தி அமைச்சு
51. அரச தனியார் பங்காண்மைக்கான தேசிய நிறுவனம்
52. இலங்கை தேசிய நிர்மாண சங்கம்
53. தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியம்
54. தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை
55. வடமேல் மாகாண பொறியியல் திணைக்களம்
56. அமைச்சரவை அலுவலகம்
57. சப்ரகமுவ மாகாண பிரதம செயலாளர் அலுவலகம்
58. மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் - மேல் மாகாணம்
59. பிரதேச அபிவிருத்தி வங்கி
60. சனாதிபதி செயலகம்
61. இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு
62. பதிவாளர் நாயகம் திணைக்களம்
63. சமூக பாதுகாப்புக் கருத்திட்டம்
64. ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையும் பட்டப்பின்படிப்பு மருத்துவப் பயிற்சி நிலையமும்
65. இலங்கை தரைப்படை தலைமையகம், ஸ்ரீ ஜயவர்தனபுர
66. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்
67. இலங்கை மருத்துவ சபை
68. ஸ்ரீ லங்கா ஸ்டேட் டிரேடிங் (ஜெனரல்) கோப்பரேசன் (STC)

69. இலங்கை திரீபோசா கம்பனி
70. இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புச் சபை
71. இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்
72. அரச மரக் கூட்டுத்தாபனம்
73. இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனம்
74. பதுளை போதனா மருத்துவமனை
75. கொழும்புப் பல்கலைக்கழகம்
76. பல்வேறு தரப்புகள்

அரச பெறுகைக்குரிய வழிகாட்டல்கள், நடபடிமுறைகள், வழிகாட்டிநெறிகள், அடங்கிய கொள்கைகளைத் தயாரிப்பதன் கீழ் கொள்கைப் பிரிவினாலர் பின்வரும் வழிகாட்டல்களையும் நடபடிமுறைகளையும் தயாரித்ல் சம்பந்தமான பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

**i. பண்டங்கள், வேலைகள் மற்றும் மதியுரை அல்லாத சேவைகளுக்கான பெறுகை வழிகாட்டிநெறிகள் - 2024**

மேற்படி வழிகாட்டிநெறிகள் 2024.11.25 ஆம் திகதிய வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. 2025.01.01 ஆம் திகதியிலிருந்து அமுலுக்குவருமாறு உரிய சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டன. அதேபோல், அதற்கான கைந்நூலும் அத்துடன் வெளியிடப்பட்டது.

**ii. மதியுரைச் சேவைகளின் பெறுகைக்கான வழிகாட்டிநெறிகள்**

மதியுரைச் சேவைகளின் பெறுகைக்கான வழிகாட்டிநெறிகள் வரையப்பட்டுள்ளதுடன, அதற்குரிய கைந்நூலுடன் 2025 ஆம் ஆண்டில் வெளியிடப்படவுள்ளது.

**iii. ஒப்பந்த முகாமைத்துவ வழிகாட்டிநெறிகள்**

முதலாவது வரைவு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. மீளாய்வு கட்டத்திலுள்ளது.

**iv. மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களுக்கான பெறுகை வழிகாட்டிநெறிகள்**

ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுசரணையின் கீழ் இந்த வழிகாட்டிநெறிகளின் முதலாவது வரைவைத் தயாரித்து தற்போது மீளாய்வு கட்டத்திலுள்ளது.

**v. அரச பெறுகைச் சட்டம்**

ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுசரணையின் கீழ் இச்சட்டத்தின் முதலாவது வரைவைத் தயாரித்து தற்போது மீளாய்வு கட்டத்திலுள்ளது.

**vi. இலத்திரனியல் அரச பெறுகை (e-GP)**

இலத்திரனியல் அரச பெறுகையை (ந-பீ) அமுல்படுத்தல் சம்பந்தமாக ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகளின்படி அவசியமான வழிகாட்ல்கள், அறிவுறுத்தல்கள், அவதானிபபுகள், யோசனைகள் வழங்கப்பட்டன.

**vii. பசுமை அரச பெறுகை**

பசுமை அரச பெறுகையை அறிமுகப்படுத்துவதற்கு அவசியமான வழிகாட்டல்கள், கண்காணிப்புகள், யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

**02.** கொள்திறன் விருத்தி

**i. பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்**

அரச துறையை இலக்கிட்டதாக 2025 ஆம் ஆண்டுக்கான பயிற்சித் திட்டம் தயாரிக்கப்பட்டது.

**ii. விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள்**

பண்டங்கள், வேலைகள், மதியுரை அல்லாத சேவைகளுக்கான பெறுகை வழிகாட்டிநெறிகள் 2024 இற்கான விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரிக்கப்பட்டன. பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்கள் 2024 ஆம் ஆண்டில் நடைபெற்றன.

அ) அமைச்சுச் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள், விசேட செலவு அலகுகளுக்கான தலைவர்களுக்கு – 2024 டிசம்பர் 6 ஆம் திகதி

ஆ) திணைக்கள மற்றும் நிறுவனத் தலைவர்களுக்கு – 2024 டிசம்பர் 13 ஆம் திகதி

**அட்டவணை 7 – பெறுகை நடவடிக்கைகள் தொடர்பான பிரச்சினைகள், விசாரணைகள், விளக்கங்கள், அறிவுறுத்தல்களுக்காக சமர்ப்பிக்கப்பட்ட, செயலாற்றும் கோரிக்கை - 2024**

| தொடர் இல. | கோப்பு இல. | கோப்பின் தலைப்பு | சம்பந்தப்பட்ட பெறுகை நிறுவனம் |
|---|---|---|---|
| 1 | NPC/PP/01/CL-01/2024 | 2024 வரவுசெலவுத் திட்ட பிரேரணைகளை அமுல்படுத்துதலும் முன்னேற்றத்தை அறிக்கையிடுதலும் | பொது நிதித் திணைக்களம் |
| 2 | NPC/PP/01/CL-02/2024 | அரச-தனியார் பங்காண்மை ஊடாக மாகாண சபை மட்டத்தில் அமுலிலுள்ள உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்திக் கருத்திட்டங்கள் பற்றிய விளக்கம் | தென்மாகாண விளையாட்டுத்துறை, இளைஞர் அலுவல்கள், கிராமிய அபிவிருத்தி, கலாசார மற்றும் கலை அலுவல்கள், சமூக நலனோம்புகை, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைகள், மகளிர் அலுவல்கள், மனைப் பொருளாதார அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சு, காலி. |
| 3 | NPC/PP/01/CL-03/2024 | பெறுகை மீதான சேர்பெறுமதி வரியின் தாக்கம் - இலங்கை மருத்துவச் சபை | இலங்கை மருத்துவச் சபை |
| 4 | NPC/PP/01/CL-04/2024 | விளக்கம் பெறுவதற்கான கோரிக்கை – அரச மரக் கூட்டுத்தாபனம் | அரச மரக் கூட்டுத்தாபனம் |

| | | | |
|---|---|---|---|
| 5 | NPC/PP/01/CL-05/2024 | ரஷ்யாவின் மொஸ்கோ, பீட்டர்ஸ்பேர்க் ஆகிய நகரங்களில் மீச்சந்தைகளில் இலங்கை தேயிலையின் வர்த்தகப் பெயரை பிரபல்யப்படுத்தும் திட்டம் | பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு |
| 6 | NPC/PP/01/CL-06/2024 | இலங்கையின் ஊவா, மத்திய மாகாணங்களில் கொவிட் 19 பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்ட சமூகங்களின் சமூக பொருளாதார தாக்குப்பிடிக்கும் ஆற்றலைப் பலப்படுத்துதல். | பொது நிதித் திணைக்களம் |
| 7 | NPC/PP/01/CL-07/2024 | தேசிய சுவடிக்கூடத் திணைக்களத்தின் பிரதான கட்டிடத்திற்கு இடத்திற்கிடம் கொண்டுசெல்லக்கூடிய இறாக்கைத் தொகுதியொன்றை நிறுவுதல். | புத்த சாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு |
| 8 | NPC/PP/01/CL-08/2024 | CIDA/SBD/102/ மற்றும் CIDA/SBD/104/ பற்றிய திருத்திய பதிப்புருக்களை ஒத்திணங்கச்செய்தல். | நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை |
| 9 | NPC/PP/01/CL-09/2024 | பண்டங்கள் வழங்குநர்களுக்கான நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் பதிவு | நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை |
| 10 | NPC/PP/01/CL-10/2024 | SBD/01 (வேலைகள் பெறுகை) மற்றும் SBD/03 (சிறிய ஒப்பந்தங்கள்) ஆகியவற்றுக்கு பதிப்பாசிரியர் குழுவுக்கு பெயர்களை முன்மொழியுமாறு கோரல் | நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை |
| 11 | NPC/PP/01/CL-11/2024 | உள்நாட்டு முகவர்களினால் மேற்கொள்ளப்படும் புதுப்பித்தல் வேலைகள் | பரீட்சைத் திணைக்களம் |
| 12 | NPC/PP/01/CL-12/2024 | பெறுகைக் குழுக்களில் தற்போது செயல்வலுப் பெறும் பெறுகை வழிகாட்டுநெறிகளின் 2.14.1 பந்தியின் கீழான அதிகார எல்லைகளைத் திருத்துவதற்கு இலங்கை பொலிஸ் திணைக்களத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணை | பொதுமக்கள் பாதுகாப்புத் திணைக்களம் |
| 13 | NPC/PP/01/CL-13/2024 | சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான விரிந்தளவான நிதி வசதிகள் நிகழ்ச்சித்திட்டத்தின் ஓரங்கமாக, 2023 செப்டம்பர் மாதத்தில் மேற்கொண்ட இலங்கையின் நிர்வாக முறைகள் பற்றிய மதிப்பீடு (GDA). | சனாதிபதி அலுவலகம் |
| 14 | NPC/PP/01/CL-14/2024 | அனைத்து உள்ளூர் அதிகார சபைகளுக்கும் உரியதாக தயாரிக்கப்பட்ட பெறுகை வழிகாட்டுநெறியும் கைந்நூலும் | அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு |

| | | | |
|---|---|---|---|
| 15 | NPC/PP/01/CL-15/2024 | நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையினால் வெளியிடப்பட்ட SBD இன் கீழ் நிறுவப்பட்ட ஒப்பந்தங்களின் கொடுப்பனவுச் சான்றிதழ்களை தயாரிக்கும்போது 2006 பெறுகைக் கைந்நூலின் 5.4.6 பிரிவை ஏற்புடைத்தாக்கிக்கொள்ளல் பற்றிய விளக்கமொன்றைப் பெற்றுக்கொள்ளல். | வடமேல் மாகாண பொறியியல் திணைக்களம் |
| 16 | NPC/PP/01/CL-16/2024 | UV Visible Spectrophotometer கொள்வனவு செய்தல், கட்டளை இலக்கம்: 008292 | விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு |
| 17 | NPC/PP/01/CL-17/2024 | அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் மூலப்பொருள் வழங்குநர்களின் முன் தகைமைகள் குறித்து கலந்துரையாடுவதற்கான கூட்டமொன்றை ஒழுங்குசெய்யுமாறு கோரல். | இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் |
| 18 | NPC/PP/01/CL-18/2024 | அரசின் இலத்திரனியல் பெறுகைகள் (e-GP) முறைமையின் 2.1 பதிப்புருவுக்கான நியமமான கூறுவிலை ஆவணத்திற்கு அனுமதி கோரல். | பொது நிதித் திணைக்களம் |
| 19 | NPC/PP/01/CL-19/2024 | மூலப்பொருள்களின் பெறுகையின்போது வங்கிப் பிணைமுறிக்குப் பதிலாக செயற்பாட்டுக் காப்பாக நாணயக் கடிதம் மூலம்/ கொடுப்பனவு ஆவணத்தின் 10% சதவீதத்தை தடுத்து வைத்துக்கொள்ளல் பற்றி ஆட்சேபனை இல்லை என்பதைக் குறிப்பிடும் கடிதமொன்றைக் கோரல். | இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் |
| 20 | NPC/PP/01/CL-20/2024 | உலக வங்கியின் நிதியீட்டம் செய்யும் ICDP கருத்திட்டம் | நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA) |
| 21 | NPC/PP/01/CL-21/2024 | 2024/2025 ஆம் ஆண்டுக்காக சிறைச்சாலைத் திணைக்களத்திற்கு உணவு வழங்குவதற்கான நிதியேற்பாடுகள் | நீதி, சிறைச்சாலை அலுவல்கள், அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு |
| 22 | NPC/PP/01/CL-22/2024 | அரச மரக் கூட்டுத்தாபனத்தின் (2023/2024) மருத்துவ காப்புறுதித் திட்டங்கள் சம்பந்தமான விளக்கங்கள் (பெறுகை இல. STC/PSM/2022.05/LP/27) | அரச மரக் கூட்டுத்தாபனம் |
| 23 | NPC/PP/01/CL-23/2024 | 2023 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் விசாரணை | இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு |

| | | | |
|---|---|---|---|
| 24 | NPC/PP/01/CL-24/2024 | பிராந்திய அபிவிருத்தி வங்கியினால் அமுல்படுத்தப்பட்ட, 10 மில்லியன் ரூபாவை விஞ்ஞாத சிறு பெறுமானம் கொண்ட வேலைகளின் பெறுகைகளுக்காக 2006 பெறுகை வழிகாட்டுநெறிகளின் 5.4.8, 5.4.9 ஆகிய பிரிவுகளின் கீழ் செயல்நிறைவேற்ற பிணைப்பொறுப்பு (Performance Security) தளர்த்தீடு. | பிராந்திய அபிவிருத்தி வங்கி |
| 25 | NPC/PP/01/CL-25/2024 | தகுதிபெற்ற ஆட்களை நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் பதிவுசெய்தல் | நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை |
| 26 | NPC/PP/01/CL-26/2024 | பெறுகைக்கு இசைவாக நிர்மாண ஒப்பந்த காலப்பகுதிகளை திருத்துவதற்கான கோரிக்கை | நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை |
| 27 | NPC/PP/01/CL-27/2024 | பெறுகை வழிகாட்டுநெறிகளும் முன்மொழிவுகளும் பற்றிய விசாரணை | தொழில்நுட்ப அமைச்சு |
| 28 | NPC/PP/01/CL-28/2024 | மீள்பிறப்பாக்க எரிசக்திக் கருத்திட்டங்களின் அபிவிருத்தியை துரிதப்படுத்துதல் | மின்சக்தி, எரிசக்தி அமைச்சு |
| 29 | NPC/PP/01/CL-29/2024 | 2023 ஆம் ஆண்டுக்காக பாடசாலை நூல் வெளியீட்டுக்கு பயன்படுத்தப்பட வேண்டிய கூறுவிலை ஆவணங்களுக்கான அனுமதி பெறல் | கல்வி வெளியீட்டுத் திணைக்களம் |
| 30 | NPC/PP/01/CL-30/2024 | பாதுகாப்பு அமைச்சின் பெறுகைச் செயன்முறையில் எழுகின்ற பிரச்சினைக்குரிய நிலைமைகள் குறித்து கலந்தாலோசித்தல் | பாதுகாப்பு அமைச்சு |
| 31 | NPC/PP/01/CL-31/2024 | இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பிரதான திணைக்கள பெறுகைக் குழுவுக்கு அதிகாரம் ஒப்படைத்தல் | மின்சக்தி, எரிசக்தி அமைச்சு |
| 32 | NPC/PP/01/CL-32/2024 | கெட்டபே, சமூர்த்தி கூட்டுறவு வங்கியில் புதிய கட்டிடமொன்றை நிர்மாணித்தல் - முதலாம் கட்டம் சம்பந்தமான விலைக்கேள்வி கோருவதற்கான ஒப்புதல் கோரல் | மாவட்ட செயலாளர் அலுவலகம், கண்டி |
| 33 | NPC/PP/01/CL-33/2024 | தேயிலை ஆராய்ச்சி நிறுவகத்தின் பிரதான அலுவலகங்கள் மற்றும் கிளை அலுவலகங்களுக்கான பாதுகாப்புச் சேவை நியமனம் சம்பந்தமான விளக்களிப்பு | இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவகம் |
| 34 | NPC/PP/01/CL-34/2024 | சுகாதாரத்துறை அபிவிருத்திக் கருத்திட்டத்திற்கான கண்காணிப்பு பணியாட்குழுவை நியமிக்கும் அவசரத் தேவை | சுகாதார அமைச்சு |

| | | | |
|---|---|---|---|
| 35 | NPC/PP/01/CL-35/2024 | கூறுவிலைதாரர்களின் முன் தகைமைகளும் பெறுகையின்போது பின்பற்றப்பட வேண்டிய நடபடிமுறைகளும் | விவசாயம் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு |
| 36 | NPC/PP/01/CL-36/2024 | சப்ரகமுவ மாகாண ஆதார மருத்துவமனைகளுக்கு மருந்து சுற்றும் பொருள்களை வழங்குவதற்கு உள்ளூர் வழங்குநர்களுக்கு முன்னுரிமையளித்தல் தொடர்பான விளக்கமளிப்பு. | சப்கரமுவ மாகாண பிரதம செயலாளர் அலுவலகம் |
| 37 | NPC/PP/01/CL-37/2024 | வரைவுச் சுற்றறிக்கை – தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அமைப்பு பற்றிய விளக்கமளிப்பு | பொது நிதித் திணைக்களம் |
| 38 | NPC/PP/01/CL-38/2024 | பெறுகைக் குழுவின் செயலாளருக்கு கொடுப்பனவு செய்தல் | இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் |
| 39 | NPC/PP/01/CL-39/2024 | திருகோணமலை மாவட்டத்தின் கல்லிகட்டு குளத்தைப் புனரமைத்தல் | கிழக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம் |
| 40 | NPC/PP/01/CL-40/2024 | பெறுகை வழிகாட்டுநெறிகளைத் திருத்துதல் | பொது நிதித் திணைக்களம் |
| 41 | NPC/PP/01/CL-41/2024 | மருத்துவ வழங்கல்கள் பிரிவுக்கு மருந்துகளை வழங்கும்போது வழங்குநர்கள் முகங்கொடுத்த சவால்கள் | பொது நிதித் திணைக்களம் |
| 42 | NPC/PP/01/CL-42/2024 | சிறைச்சாலைத் திணைக்களத்தின் பச்சை/உலர் உணவு வழங்கல் பெறுகை தொடர்பில் முன் கூறுவிலைக் கூட்டத்தின்போது தெரியவந்தவாறு இரண்டு சபைகள் கூறுவிலைகளைத் திறப்பதற்கு எதிர்ப்புத் தெரித்தமையும் விளக்கங்களும் சம்பந்தமான எழுத்திலான முறைப்பாடு. | பொது நிதித் திணைக்களம் |
| 43 | NPC/PP/01/CL-43/2024 | கூறுவிலைதாரர்கள் இருவரினால் சமர்ப்பிக்கப்படும் கூறுவிலைப் பெறுமதிகள் சமமானதாக இருக்குமிடத்து செயலாற்ற வேண்டிய விதம் பற்றிய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளல் | சப்கமுவ மாகாண பிரதம செயலாளர் அலுவலகம் |
| 44 | NPC/PP/01/CL-44/2024 | 2024 ஆம் ஆண்டுக்கான சுகாதார காப்புறுதித் திட்டமொன்றை தெரிவுசெய்தல் | அரச மரக் கூட்டுத்தாபனம் |
| 45 | NPC/PP/01/CL-45/2024 | பொது கணக்குகள் குழுவின் சிபார்சுகள் | பொது கணக்குகள் குழு |
| 46 | NPC/PP/01/CL-46/2024 | தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ் விலைக்கேள்வி திறக்கும் சந்தப்பங்களில் விரிவான தகவல்களை வழங்குதல் சம்பந்தமான விளக்கமளிப்பு | மால்போ டிரேடிங் கம்பனி |

| | | | |
|---|---|---|---|
| 47 | NPC/PP/01/CL-47/2024 | DPC அதிகார எல்லையின் கீழ் DPC விலைக்கேள்வி மதிப்பீடு சம்பந்தமான விளக்கமளிப்பு | பொது நிதித் திணைக்களம் |
| 48 | NPC/PP/01/CL-48/2024 | அக்ரஹார சுகாதாரக் காப்புறுதித் திட்டம் பற்றி தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்திலிருந்து கிடைத்த கடிதம் | தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் |
| 49 | NPC/PP/01/CL-49/2024 | பண்டங்கள், வேலைகள் மற்றும் மதியுரை அல்லாத சேவைகள் பற்றிய பெறுகை வழிகாட்டுநெறிகள் - 2024 ஐ வலுவாக்கம் செய்தல் | பொது நிதித் திணைக்களம் |
| 50 | NPC/PP/01/CL-50/2024 | தற்போது மேம்படுத்தப்பட்டுள்ள பெறுகை முறைமையைப் பின்பற்றுவதற்கு அனுமதி கோரல் | இலங்கை மின்சார சபை |
| 51 | NPC/PP/01/CL-51/2024 | இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எண்ணெய் பெறுகையை டிஜிட்டல் மயப்படுத்துவதற்கு கூறுவிலைகோரும் மேடையை அமுல்படுத்தல் | இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் |
| 52 | NPC/PP/01/CL-52/2024 | அரச தனியார் பங்காண்மையின் ஊடாக அமுல்படுத்தப்படும் மாகாண சபை உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் | பொது நிதித் திணைக்களம் |
| 53 | NPC/PP/01/CL-53/2024 | சிறைச்சாலைகளின் புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு இயந்திரங்களை நிர்மாணித்தல் - நேரடி நிர்மாணக் கிரயத்தில் 11% சதவீத மதியுரைக் கட்டணமொன்றை தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு கொடுப்பனவு செய்வதை நியாயப்படுத்தல் | தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு |
| 54 | NPC/PP/01/CL-54/2024 | வங்கிப் பிணைமுறி பற்றிய விளக்கங்கள் | தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களம் |
| 55 | NPC/PP/01/CL-55/2024 | தேசிய பெறுகை மற்றும் அரச-தனியார் பங்காண்மை (PPP) பற்றிய சட்டங்களை வரைவதற்காக சிவில் சமூகத்தின் கருத்தறிதல் | பொது நிதித் திணைக்களம் |
| 56 | NPC/PP/01/CL-56/2024 | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவுக்கு (TEC) பெறுகைக் கொடுப்பனவுக்கான வேலைத்திட்டமொன்று பற்றிய அறிவிப்பு | இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புச் சபை |

| | | | |
|---|---|---|---|
| 57 | NPC/PP/01/CL-57/2024 | பாடசாலை கிரிக்கற் அபிவிருத்தித் திட்டம் - 2024 கிரிக்கற் ஆட்ட பொருள் தொகுதிகளைக் கொள்வனவு செய்தல் | விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சு |
| 58 | NPC/PP/01/CL-58/2024 | கிராமிய அபிவிருத்திச் சங்கங்களுக்கு நேரடியாக ஒப்பந்தமளித்தல் சம்பந்தமாக. | பொது நிதித் திணைக்களம் |
| 59 | NPC/PP/01/CL-59/2024 | 2016 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட கொங்கிறீட் கற்களைப் பரப்பும் வீதி அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்ட அலகுக்கான விலைகளை பயன்படுத்தாமை சம்பந்தமான ஆரம்ப விசாரணை | அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு |
| 60 | NPC/PP/01/CL-60/2024 | அரசாங்க அச்சகத் திணைக்களத்தின் பணியாட்குழுவினருக்கான 1 லீட்டர் பசும்பால் ரெட்ரா பக்கற்றுக்களின் பெறுகை சம்பந்தமான விளக்கங்கள் | அரசாங்க அச்சகத் திணைக்களம் |
| 61 | NPC/PP/01/CL-61/2024 | பெறுகை நடபடிமுறை பற்றிய விளக்கம், விலைக்கேள்வி திறத்தல் - விலைக்கேள்வி மறுபடிவம் | பொது நிதித் திணைக்களம் |
| 62 | NPC/PP/01/CL-62/2024 | நிர்மாணக் கருத்திட்டங்களுக்கான முற்பணங்களை கொடுப்பனவு செய்தல் | நீதி, சிறைச்சாலை அலுவல்கள், அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு |
| 63 | NPC/PP/01/CL-63/2024 | நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் தரப்படுத்தல் எல்லைகளைத் திருத்துதல் | நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை |
| 64 | NPC/PP/01/CL-64/2024 | கலந்துரையாடலொன்றுக்கான கோரிக்கை – தேசிய பெறுகை வழிகாட்டுநெறிகளையும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு சிறப்பாயமைந்த பெறுகைக் கொள்கையொன்றையும் அபிவிருத்தி செய்தல் | இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் |
| 65 | NPC/PP/01/CL-65/2024 | மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களின் பெறுகை வழிகாட்டுநெறிகள்-2022 இன் 3.3, 3.4 ஆகிய பிரிவுகளைத் திருத்துமாறு கோரல் | சுகாதார அமைச்சு |
| 66 | NPC/PP/01/CL-66/2024 | ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனைக்கு 05 கட்டில் மின்தூக்கிகளை வழங்குதல், நிறுவுதல், பரிசோதித்தல், இயக்குதல், பராமரித்தல் என்பவற்றுக்கான விலைக்கேள்வி | சுகாதார அமைச்சு |
| 67 | NPC/PP/01/CL-67/2024 | அரச வர்த்தக கூட்டுத்தாபனத்திலிருந்து ஒரே கூறுவிலை கோரலின் மூலம் பண்டங்களையும் சேவைகளையும் | நிதி அமைச்சு |

| | | | |
|---|---|---|---|
| | | கொள்வனவு செய்வதற்கு அரச நிறுவனங்களுக்கு வாய்ப்பளித்தல். | |
| 68 | NPC/PP/01/CL-68/2024 | காற்றுச்சீராக்கி இயந்திரங்களைப் பொருத்தியிணைப்பதும் திருத்துவதும் எவ்விதமாக பொருள்கோடல் செய்யப்படுகிறது (வேலையா அல்லது சேவையா) என்பது பற்றி ஆலோசனை பெறல் | கல்வி அமைச்சு |
| 69 | NPC/PP/01/CL-69/2024 | மகாபொல நிகழ்நிலை லொத்தரை மீண்டும் அமுல்படுத்துதல் தொடர்பாக நியமிக்கப்பட்ட அமைச்சரவை பெறுகைக் குழுவும் அதன் செயற்பாடும் பற்றிய முறைப்பாடு | வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு |
| 70 | NPC/PP/01/CL-70/2024 | இலங்கையில் நிர்மாண ஒப்பந்தக்காரர்களுக்கு தடுத்துவைத்த தொகைகள், முறிகள், உத்தரவாதங்கள் என்பவற்றை விடுவிப்பதில் கொள்கைசார் தலையீடொன்றின் அவசரத் தேவை | பொது நிதித் திணைக்களம் |
| 71 | NPC/PP/01/CL-71/2024 | நிர்மாணக் கைத்தொழிலில் அதிகரித்துச்செல்லும் ஒப்பந்தங்களுக்குரிய பிணக்குகளைத் தீர்ப்பதற்கு உடன் தலையீடு செய்யுமாறு கோரல் | பொது நிதித் திணைக்களம் |
| 72 | NPC/PP/01/CL-72/2024 | 2022 பெறுகை வழிகாட்டுநெறிகளின் 3.6 உப பந்தி பற்றி விளக்கம் கோரல் | சுகாதார அமைச்சு |
| 73 | NPC/PP/01/CL-73/2024 | பெறுகை எல்லைகளைத் திருத்திக்கொள்ளல் | தேர்தல் ஆணைக்குழு |
| 74 | NPC/PP/01/CL-74/2024 | உத்தேச 100 மெகா உவோற் சியம்பலாண்டுவ சூரியசக்தி மின் உற்பத்திக் கருத்திட்டத்திற்கு நுழைவுப் பாதை அமைப்பதற்கான பெறுகைக்கு உரிய மதியுரை சம்பந்தமான விளக்கங்கள் | நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை |
| 75 | NPC/PP/01/CL-75/2024 | கொலொன்னாவை அரச தொழிற்சாலைத் திணைக்களத்தின் வார்ப்பட வேலைக்களத்தில் உந்துலை அலகொன்றை நிறுவுதல் | அரச தொழிற்சாலைகள் திணைக்களம் |
| 76 | NPC/PP/01/CL-76/2024 | இலங்கை போக்குவரத்துச் சபைக்கு புதிய டயர் தொகுதிகளை பெறுகை செய்தல் | போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு |
| 77 | NPC/PP/01/CL-77/2024 | ஸ்ரீ லங்கன் விமான சேவை வரையறுத்த பங்குகள் விற்பனை பற்றிய விளக்கமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு உரிய அமைச்சரவை முடிவு | சனாதிபதி அலுவலகம் |

| | | | |
|---|---|---|---|
| 78 | NPC/PP/01/CL-78/2024 | ரிட்ஜ்வே அம்மையார் சிறுவர் மருத்துவமனையின் 9 மாடிக் கட்டிடத்திற்கு நிறப்பூச்சு பூசுவதற்கான விலைக்கேள்வியை, தகைமைகளைப் பூர்த்திசெய்யாத நிர்மாண நிறுவனமொன்றுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றமை சம்பந்தமாக. | சுகாதார அமைச்சு |
| 79 | NPC/PP/01/CL-79/2024 | இலங்கையில் அரச பெறுகையின் வெளிப்படைத்தன்மையை அதிகரிப்பதற்கான ஒத்துழைப்பு உதவியைப் பெற்றுக் கொள்ளல் | அரச சார்பற்ற அமைப்புக்கள் |
| 80 | NPC/PP/01/CL-80/2024 | 2022 – மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களின் பெறுகைக்கான வழிகாட்டுநெறிகளின் 3.5, 6.5 ஆகிய பந்திகளை திருத்துமாறு கோரல் | சுகாதார அமைச்சு |
| 81 | NPC/PP/01/CL-81/2024 | ஆலோசனை கோரல் | இலங்கை தரைப்படை தலைமையகம், ஸ்ரீ ஜயவர்தனபுர |
| 82 | NPC/PP/01/CL-82/2024 | 2024 ஆம் ஆண்டிற்காக இலங்கை பொலிஸ் திணைக்களத்திற்கு நியமிக்கப்பட்டுள்ள பெறுகைக் குழுக்களுக்கு அங்கத்தவர்களை நியமிப்பதைத் திருத்துதல் | பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு |
| 83 | NPC/PP/01/CL-83/2024 | வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மோதல்களினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வீடுகளை அமைத்தல் சம்பந்தமாக கூட்டு கம்பனியொன்றை கறைநிரலில் சேர்த்தல் பற்றிய விளக்கம் | நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு |
| 84 | NPC/PP/01/CL-84/2024 | வேலை மற்றும் பண்ட ஒப்பந்தங்களில் முற்பணக் கொடுப்பனவுகள் - பிணைமுறிகளை ஏற்றுக்கொள்ளல் பற்றிய விளக்கம் | பொது நிதித் திணைக்களம் |
| 85 | NPC/PP/01/CL-85/2024 | பார கனிய மணல் விற்பனை (கூறுவிலை தொடர்பிலக்கம்: LMS/MKT/TOR/24/04) | கைத்தொழில் அமைச்சு |
| 86 | NPC/PP/01/CL-86/2024 | வெப் டொமெயின், வெப் சர்வர், சர்வர்கள் பெறுகைக்கான நடைமுறை பற்றி விசாரித்தல் | மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலர் - மேல் மாகாணம் |
| 87 | NPC/PP/01/CL-87/2024 | கூறுவிலை ஆவணங்களில் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் பற்றி தெளிவுபெறல் | கல்வி அமைச்சு |
| 88 | NPC/PP/01/CL-88/2024 | தேசிய சுவடிக்கூட திணைக்களத்தின் பிரதான கட்டிடத்தின் புனரமைப்பு செய்து காற்றுச் சீராக்கியையும் தீயணைப்பு மற்றும் உயர் பாதுகாப்பு முறைமைகளையும் நிறுவுதல். | பொது நிதித் திணைக்களம் |

| | | | |
|---|---|---|---|
| 89 | NPC/PP/01/CL-89/2024 | தொடர்பு: பெறுகை நிபந்தனைகளுக்கு, சர்வதேச போட்டி கூறுவிலைக்கு வெளிநாட்டு ஒப்பந்தக்காரர்களைப் பதிவுசெய்யும் தேவையை உள்ளடக்குதல் - பண்டங்களும் வேலைகளும் பற்றிய பெறுகைக் கைந்நூல் | பொது நிதித் திணைக்களம் |
| 90 | NPC/PP/01/CL-90/2024 | பாராளுமன்றத் தேர்தல் - 2024 பெறுகை நடவடிக்கைகள் | தேர்தல் ஆணைக்குழு |
| 91 | NPC/PP/01/CL-91/2024 | 250 மெகா உவோற் கொண்ட மன்னார் காற்றாலை சக்தி கருத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்கான சட்ட நடவடிக்கைகளுக்கு சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுச் செயன்முறைக்குரிய மதியுரைச் சேவையைப் பெற்றுக் கொள்ளல் | மின்சக்தி, எரிசக்தி அமைச்சு |
| 92 | NPC/PP/01/CL-92/2024 | ஒப்பந்தத்தொகை அதிகரிப்பு பற்றி ஆலோசனை கோரல் | பாதுகாப்பு அமைச்சு |
| 93 | NPC/PP/01/CL-93/2024 | AASL நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்களின் கீழ் வெளிநாட்டுப் பயிற்சிகளையும் உற்பத்தி வசதிகளை பார்வையிடுதல் | பொது நிதித் திணைக்களம் |
| 94 | NPC/PP/01/CL-94/2024 | இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளுக்கான ஒத்திசைவு | இறக்குமதி, ஏற்றுமதிக் கட் கட்டுப்பாட்டுத் திணைக்களம் |
